வாலிநோக்கத்தில் மீன்பிடித் துறைமுகம்.

*வினா எண். 82—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முகவை மாவட்டம் வாலிநோக்கத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வாலிநோக்கத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் செயற்குறிப்பு மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப் பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப்பகுதியிலே துறைமுகம் கட்டுவதற்காக மத்திய அரசின் ஒப்புதல் வந்தவுடன்—அங்கே அதிகமான மீன் மட்டும் அல்ல, உப்பும் அதிகமாகக் கிடைக்கிறது—தூத்துக்குடிக்கும் வாலி நோக்கத்திற்கும் இடையே உப்பை ஏற்றுமதி செய்யக்கூடிய வகையிலே கப்பல் விட அரசு பரிசிலனை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றிய விவரக் குறிப்புகள் இல்லை. ஆனால் மீன்பிடித் துறைமுகம் ஏற்படுத்த வேண்டும் என்று முயற்சி எடுத்து அதற்கான திருத்த மதிப்பீடு களுடன் மத்திய அரசுக்கு மாநில அரசு எழுதிற்று. 1 கோடியே 16 லட்சம் ரூபாய் செலவு ஆகும் என்றும் அதிலே 86.13 இலட்சத்தை மாநில அரசு ஏற்றுக்கொண்டால் மீதியை மத்திய அரசு கொடுத்து அதைச் செய்யலாம் என்று சொல்லியது மத்திய அரசு. 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் அந்தக் குறிப்பை ஏற்று மாநில அரசு தன் பங்காகிய 86 லட்சத்து 13 ஆயிரத்தை செலுத்த தயாராக இருக்கிறது என்று எழுதப்பட்டி ருக்கிறது. மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. அது வந்தவுடனே அந்தத் துறைமுக வேலைகள் தொடங்கப் படும்.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, இந்த வாலிநோக்கத்திலே மீன்பிடித் துறைமுகம் கட்டுவதற்காக ஆரம்ப வேலைகள், ரோடுகள் போன்றவைகள் போடப்படுவதற்காக ஏற்கெனவே திட்டங்கள் தீட்டப்பட்டிருப்பதாக சென்ற ஆண்டிலே வந்த குறிப்புகளிலே இருந்ததாக எனக்கு நினைவு. அதைத் தொடர்ந்து அந்த வேலைகளை அந்தப் பகுதியிலே செய்ய அரசு விரைவிலே நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துறைமுகம் கட்டுவதனைப் பற்றித்தான் இப்போது திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் தரவேண்டியிருக் கிறது. மாநில அரசு தன்னுடைய பங்கை செலுத்த வேண்டு மென்று சொல்லியது. மாநில அரசு அதைச் செலுத்தத் தயாராக இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கான ஒப்புதலை மத்திய அரசு கொடுத்தவுடன் வேலைகள் துவங்கப் படும்.

1981 ஜனவரி 29]

திரு. செ. சிவசாமி: வாலிநோக்கம் பகுதியிலே இயற்கையிலேயே ஒரு பெரிய குடா இருக்கிறது. அந்தக் குடாவை அபிவிருத்தி செய்தால் நூற்றுக்கணக்கான படகுகளை இயற்கைச் சீற்றங்கள் ஏற்படுகிற நேரத்திலே கூட நிறுத்தலாம். ஆகவே அதை அபிவிருத்தி செய்கிற வேலையை சீக்கிரமாகச் செய்வதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இது வாலிநோக்கத்திலே அமைக்கப்பட இருக்கிற துறைமுகம் பற்றியதாகும். இந்தத் திட்டம்தான் இப்போது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கு மத்திய அரசிடமிருந்து ஒப்புதல் வந்தவுடன் வேலைகள் துவங்கப்படும்.

சைதாப்பேட்டையில் அமுதம் அங்காடி

*வினா எண். 83—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை சைதாப்பேட்டையில் அமுதம் பல்பொருள் அங்காடி திறப்பதற்கு செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. து. புருஷோத்தமன்: சைதைப் பகுதியில் உள்ள கோட்டூர்புரம், வடுவன்கரை, ஜோன்ஸ் சாலை ஆகிய இடங்களில் உள்ள மக்களுக்காக அமுதம் பல்பொருள் அங்காடி திறக்க வேண்டுமென்று பல்வேறு மனுக்கள் தரப்பட்டு இருக்கின்றன. எனவே மீண்டும் பரிசீலனை செய்து அது திறக்கப்படுமா? பொதுவாக பல்பொருள் அங்காடிகளில் "பாம் ஆயில்" இல்லை எனப் புகார் வந்து உள்ளதே, அதைப்பற்றி அரசுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அமுதம் பல்பொருள் அங்காடி, சைதாப்பேட்டைக்கு அருகில் உள்ள தெற்கு உஸ்மான் சாலை, ஆரியக் கவுடர் சாலை, அசோக் நகர் போன்ற இடங்களில் ஏற்கனவே இயங்கி வருகின்றன. ஆனால் ஒரு அமுதம் அங்காடி இயங்க வேண்டுமென்றால் மாதத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய்க்காவது விற்பனை ஆகவேண்டும். சைதாப்பேட்டைக்கு அருகில் இருக்கின்ற இந்த தெற்கு உஸ்மான் சாலை, ஆரியக் கவுடர் சாலை, அசோக் நகர் ஆகிய இந்த மூன்று இடங்களிலும் அமைக்கப்பட்டிருக்கின்ற அமுதம் பல்பொருள் அங்காடிகளில் இந்த இலக்கையே நிறைவேற்ற முடியாத அளவிற்கு குறைவாகத்தான் அங்கே இருக்கிறது. ஆகவே, பக்கத்திலே இருக்கின்ற சைதாப்பேட்டையிலே மற்றொன்றையும் திறக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற குறிப்பு இருக்கிறது. இப்பொழுது சைதாப்பேட்டையில்